## மாண்புமிகு அமைச்சர் (நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள்)

1. <u>புதிய மாவட்ட ஊராட்சி அலுவலகக் கட்டடங்கள் கட்டுதல்.</u>

மூன்றடுக்கு ஊரக உள்ளாட்சி அமைப்புகளில் ஒன்றான மாவட்ட ஊராட்சியானது, மாவட்ட அளவில் திட்ட செயல்பாட்டிற்கு ஆலோசனை வழங்கும் அமைப்பாக விளங்குகிறது. விருதுநகர் மற்றும் வேலூர் மாவட்டங்களில் உள்ள மாவட்ட ஊராட்சி அலுவலகங்கள் மிகவும் சேதமடைந்த நிலையிலும், திருவள்ளூர் மாவட்ட ஊராட்சி அலுவலகம் மிகச் சிறிய இடத்திலும் இயங்கி வருகிறது. எனவே இந்த மூன்று மாவட்டங்களிலும் **மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆணையின்படி** மூன்று புதிய மாவட்ட ஊராட்சி அலுவலக கட்டடங்கள் ஒவ்வொன்றும் 75 இலட்சம் ரூபாய் செலவில் மொத்தம் ரூ.2.25 கோடி மதிப்பீட்டில் கட்டப்படும்.

2. <u>பிளாஸ்டிக் மறுசுழற்சி மையங்கள் அமைத்தல்</u>

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆணையின்படி** சுற்றுச் சூழலை மாசுபடுத்தும் பிளாஸ்டிக் கழிவினை அகற்றுதல் மற்றும் சுய உதவிக்குழு மகளிருக்கு வாழ்வாதார வாய்ப்புகளை ஏற்படுத்துதல் போன்ற நோக்கங்களுக்காக பிளாஸ்டிக் கழிவு சேகரிப்பு மையங்கள் தலா 4 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அரியலூர், கரூர், நீலகிரி, தூத்துக்குடி மற்றும் கன்னியாகுமரி ஆகிய 5 மாவட்டங்களில் மொத்தம் 20 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் நிறுவப்படும்.

3. <u>நெடுஞ்சாலைகளின் இருமருங்கிலும்  நிழல் தரும் மரக்கன்றுகள் நடுதல்</u>

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆணையின்படி** ஊரகப் பகுதிகளை பசுமை மயமாக்கும் நோக்கத்தோடு நெடுஞ்சாலைத் துறைக்கு சொந்தமான 500 கி.மீ. நீளமுள்ள சாலைகளில் 7.92 கோடி ரூபாய் செலவினத்தில் 4.74 இலட்சம் மனித சக்தி நாட்கள் உருவாக்கும் வகையில் சாலைகளின் இருமருங்கிலும் நிழல் தரும் மரக்கன்றுகள் நடும் பணி மேற்கொள்ளப்படும்.

4. ஊராட்சி ஒன்றியப் பள்ளிகளில் சுற்றுச்சுவர் கட்டுதல்

பள்ளியில் பயிலும் மாணவ மாணவியருக்கு பாதுகாப்பான சுற்றுச்சூழலை ஏற்படுத்தும் பொருட்டும், பள்ளிகளின் சொத்துக்களை பாதுகாப்பதற்காகவும் **மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆணையின்படி** 2014 –15ம் ஆண்டில், 500 ஊராட்சி ஒன்றிய ஆரம்ப மற்றும் நடுநிலைப் பள்ளிகளுக்கு 20 கோடி ரூபாய் மதிப்பீட்டில் சுற்றுச் சுவர் அமைக்கப்படும்.

## 5. <u>ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளுக்கு ஊக்க நிதி வழங்குதல்</u>

ஒரு ஊராட்சியில் தரமதிப்பீட்டில் தேர்ச்சி பெற்ற அனைத்து சுய உதவிக் குழுக்களையும் இணைத்து ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் அமைக்கப்படுகின்றன. ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளை வலுப்படுத்துவதற்காகவும், ஊக்கப்படுத்துவதற்காகவும் **மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆணையின்படி** 2014–15ம் ஆண்டில் 824 ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் ஒவ்வொன்றுக்கும் ஒரு இலட்சம் ரூபாய் வீதம் 8.24 கோடி ரூபாய் ஊக்க நிதி வழங்கப்படும். இதன் மூலம் மாநிலம் முழுவதுமுள்ள 12,524 ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளுக்கும், ஊக்க நிதி அனுமதிக்கப்பட்டுள்ளது.

6. <u>மகளிர் சுய உதவிக் குழு உறுப்பினர்கள் மற்றும் கூட்டமைப்புகளுக்கிடையே கலாச்சார போட்டிகளுடன் விளையாட்டுப் போட்டிகளை நடத்துதல்</u>

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதயதெய்வம் **புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆணையின்படி** மகளிர் சுய உதவிக் குழு உறுப்பினர்கள் மற்றும் கூட்டமைப்பு உறுப்பினர்களிடையே ஒரு இணக்கமான நிலை ஏற்படவும், அவர்களது திறன்களை வெளிப்படுத்தி ஊக்கப்படுத்துவதற்காகவும், மகளிருக்கான கலாச்சாரப் போட்டிகளுடன் முதன்முதலாக விளையாட்டுப்போட்டிகளும் இணைத்து நடத்தப்படும். இதற்காக 1.60 கோடி ரூபாய் செலவிடப்படும்.

7. <u>புதிய சுய உதவிக் குழுக்கள் அமைத்தல்</u>

பல்வேறு ஆண்டுகளாக தொடர்ந்து சுய உதவிக் குழுக்கள் அமைக்கப்பட்டு வந்தாலும் இன்னும் ஆதரவற்ற பெண்கள், ஏழைகள், நலிவுற்றோர், மாற்றுத் திறனாளிகள் மற்றும் பழங்குடியினர் பலர் சுய உதவிக் குழு இயக்கத்தில் சேராமல் இருப்பது கண்டறியப்பட்டுள்ளது.

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆணையின்படி 2014–15** ஆம் ஆண்டில், இது வரை சுயஉதவிக் குழுவில் உறுப்பினராக சேராத ஆதரவற்றோர், ஏழைகள், நலிவுற்றோர், மாற்றுத்திறனாளிகள் மற்றும் பழங்குடியினரைக் கொண்டு **10,000** சுய உதவிக் குழுக்கள் அமைக்கப்படும். இதற்காக நடப்பு ஆண்டில் **35** இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படும்.

8. <u>வேலை வாய்ப்பு முகாம்கள் நடத்துதல்</u>

கிராமப்புறங்களில் உள்ள வறுமைக் கோட்டிற்கு கீழ் உள்ள குடும்பங்களைச் சார்ந்த படித்த திறமையுள்ள இளைஞர்கள் தங்கள் மாவட்டங்களின் வெளியே உள்ள பல்வேறு துறைகளில் கிடைக்கும் வேலைவாய்ப்புகள் பற்றிய தகவல்களை அறியாமல் உள்ளனர். இதனால், கிராமப்புற படித்த இளைஞர்களிடையே வேலை வாய்ப்பின்மையும், தகுதிக்கேற்ற வேலை இல்லாமல் இருக்கும் சூழ்நிலையும் உள்ளது.

கிராமப்புற இளைஞர்களை ஒன்றிணைத்து அவர்களின் திறமைக்கேற்ற வேலைவாய்ப்பினை பெற்றிட **மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆணையின்படி** 2014–15 ஆம் ஆண்டில் ஒவ்வொரு மாவட்டத்திலும் 3 முகாம்கள் வீதம் 100 வேலைவாய்ப்பு முகாம்கள் 20 இலட்சம் ரூபாய் செலவில் நடத்தப்படும்.

9. <u>சுய உதவிக் குழுக்களுக்கு தொழில் முனைவோர் பயிற்சி வழங்குதல்</u>

சுய தொழில் பயிற்சி அளிப்பதில் மிக்க அனுபவம் பெற்ற பயிற்சி நிறுவனங்களின் மூலம் தனியாகவோ அல்லது குழுவாக இணைந்தோ சுய தொழில் மேற்கொள்ள ஆர்வமுள்ள மகளிருக்கு மூலப்பொருட்கள் கொள்முதல், இயந்திரங்கள் நிறுவுதல், மதிப்புக்கூட்டுதல், விலை நிர்ணயித்தல் மற்றும் தரச்சான்று பெறுதல் போன்ற அம்சங்களை உள்ளடக்கி தொழில் முனைவோர் பயிற்சி வழங்கப்படுகிறது.

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆணையின்படி** 4000 நகர்ப்புற மற்றும் கிராமப்புற மகளிர் சுயஉதவிக்குழு பெண்களுக்கு தலா ரூ.5,000 செலவில் சுய தொழில் செய்யவும் மற்றும் நிறுவனங்களில் பணிபுரியவும் தொழில் முனைவோர் பயிற்சிகள் 2014–15 ஆம் ஆண்டில் 2 கோடி ரூபாய் செலவில் வழங்கப்படும்.

10. <u>கிராம வறுமை ஒழிப்பு சங்க பெண் உறுப்பினர்கள் மற்றும் ஊராட்சி அளவிலான கூட்டமைப்பின் பெண் உறுப்பினர்களுக்கு தற்காப்புக் கலை பயிற்சி வழங்குதல்</u>

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆணையின்படி** புது வாழ்வு திட்டத்தின் மூலம் 2014–15 ஆம் ஆண்டில் 4,174 கிராம வறுமை ஒழிப்பு சங்கங்களின் பெண் உறுப்பினர்கள் மற்றும் ஊராட்சி அளவிலான சுய உதவிக்குழு கூட்டமைப்பு உறுப்பினர்களுக்கு முதல் கட்டமாக ‘‘மக்கள் கற்றல் மையங்கள்’’ (மகமை) வாயிலாக தற்காப்புக்கலை பயிற்சி வழங்கப்படும். இதற்காக 4.50 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படும்.

11. <u>துணை வட்டார வளர்ச்சி அலுவலர்கள் மற்றும் ஒன்றிய மேற்பார்வையாளர்களுக்கு உள்வட்ட உபயோகிப்பாளர் குழு **(CUG)** முறையில் அலைபேசி வசதி செய்தல்</u>

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆணையின்படி** திட்டச் செயல்பாட்டினை திறம்பட கண்காணிக்கவும், திட்டத்தினை தரமாக செயல்படுத்திடவும் துணை வட்டார வளர்ச்சி அலுவலர்கள் மற்றும் பணிமேற்பார்வையாளர்களுக்கு உள்வட்ட உபயோகிப்பாளர் குழு வசதி (**Closed User Group**) முறையில் அலைபேசி வசதி செய்யப்படும்.

**3,912** துணை வட்டார வளர்ச்சி அலுவலர்களுக்கும், **2,602** ஒன்றிய மேற்பார்வையாளர்களுக்கும், சந்தாதாரர் அடையாள தொகுதிக்கூறு அட்டைகள் (Sim Cards) **1.29** கோடி ரூபாய் செலவில் வழங்கப்படும்.